# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# நதியிலிருந்து வந்த இளவரசன்


எழுதியவர்: Edward Hughes
சித்தரிப்பவர்: M. Maillot; Lazarus
மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj
தழுவியவர்: M. Maillot; Sarah S.


**கதைகள்** 60 **ல்** 9


**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*



உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.


Tamil






ஏறக்குறைய முன்னூறு வருடங்கள் கடந்து விட்டன. யோசேப்பின் சந்ததியாகிய எபிரேயர்கள், எகிப்திலே ஒரு பெரிய ஜனக்கூட்டமாய் மாறினார்கள்.




புதிய பார்வோன், எங்கே எபிரேயர் தனக்கு எதிராக மாறிவிடுவார்களோ என்று பயந்து, அவர்களை அடிமைகளாக்கினான்.




பார்வோன் எபிரேயரை மிகவும் கொடூரமாக நடத்தினான். அவர்களை கட்டாயப் படுத்தி பெரிய பட்டணங்களை கட்டினான். ஆனால் அவன் எவ்வளவுக்கதிகமாக கஷ்டப்படுத்தி வேலை வாங்கினானோ அவ்வளவுக்கதிகமாய் அவர்கள் எண்ணிக்கையிலே பெருகினார்கள்.




ஒரு நாள், பார்வோனிடமிருந்து ஒரு பயங்கரமான கட்டளை பிறந்தது. "புதிதாக பிறக்கிற ஒவ்வொரு ஆண் பிள்ளைகளையும் நைல் நதியிலே போடச்சொன்னான்." துஷ்டனான பார்வோன் எப்படியாவது எபிரேயர்களை கட்டுப்படுத்த வேண்டுமென கங்கனம் கட்டினான். குழந்தைகளைக்கூட அவன் கொலை செய்வான்!




"நான் என்ன செய்வது?" என்று ஒரு குடும்பம் திகைத்திருக்கலாம். அவர்கள் தங்களுடைய குழந்தையை நைல் நதியிலே போட நினைத்தார்கள். ஆனால் அந்த குழந்தையை தண்ணீர் புக முடியாத ஒரு கூடையை செய்து நன்றாக கீல் பூசி அதிலே வைத்தார்கள்.




இந்த அருமையான சுமையைச் சுமந்து கொண்டு, அந்தக் கூடையானது நாணற்செடியின் மத்தியில் படகு போல் மிதந்தது. அந்த குழந்தைக்கு என்ன வேணுமானாலும் நடக்கலாம்.




அழகான அந்த கூடையானது நாணற்செடிகளின் மத்தியில் மிதந்துக்கொண்டிருந்ததை, அந்தக் குழந்தையின் சகோதரி தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தாள்.
9


திடீரென பார்வோனின் குமாரத்தியும், அவளுடைய வேலைக்காரிகளும், குளிப்பதற்காக நதியோரம் வந்தார்கள்.
10


அந்தக் கூடையானது மறைவாக இருப்பதற்கு சாத்தியமில்லை. ஒரு வேளை அதை காணாமல் கூட நடந்து போய்விடலாம்.
11


"ஒ! ஒரு கூடை: அந்த நாணல்களுக்கு மத்தியிலே. அதற்குள்ளாக என்ன இருக்க வேண்டும் என்று ஆச்சரியப்பட்டாள்." வேலைக்காரிகளை அந்த கூடையை எடுத்துக் கொண்டு வரும்படி பார்வோன் குமாரத்தி சொன்னாள். அவள் திறந்து பார்த்த போது அந்தக் குழந்தை அழத்தொடங்கியது. "இது ஒரு எபிரேயக் குழந்தை," என்று இளவரசி உரக்கக் கூறினாள்.
12


"சின்ன ஏழைப் பிள்ளை. நீ மிகவும் அழகாயிருக்கிறாய்." பெரியவர்கள் இப்படி பேசுவது போல பார்வோனின் குமாரத்தியும் பேசியிருக்கலாம். "சின்னஞ்சிறு அழகுச் செல்லமே" என்று எகிப்திய பாஷையிலே சொல்லியிருக்கக்கூடும்.
13


தேவன் விசேஷித்த ஞானத்தை அந்தக் குழந்தையின் சகோதரிக்கு கொடுத்திருக்க வேண்டும். பார்வோனின் குமாரத்தியினிடத்தில் அவள் ஓடினாள். "இந்தக் குழந்தையை வளர்த்திட நான் ஒரு எபிரேய ஸ்திரீயை அழைத்துக்கொண்டு வரட்டுமா?" "நீ செய்யலாம்" என்று பதில் வந்தது. அவள் ஓடிப் போய் யாரை அழைத்துக் கொண்டு வருவாள் என்று நினைக்கிறீர்கள்?
14

"அம்மா!  சீக்கிரமாக வாருங்கள்!  ஓ சீக்கிரம்!"
ஒருவேளை எல்லாவற்றையும் விளக்கிச் சொல்ல
நேரமில்லாதிருந்திருக்கலாம்.
அவர்கள் இரண்டு
பேரும் சேர்ந்து
நடை பாதையிலே
வேகமாய்
சென்றார்கள்.



15

நதியண்டையிலே, "இந்தக் குழந்தையை எனக்காக வளர்த்து
விடு.  நான் உனக்கு சம்பளம் கொடுக்கிறேன்.  அவனை
மோசே என்று கூப்பிடு," என்று குழந்தையை
கரம் நீட்டி கொடுத்தாள்.
எகிப்திய பாஷையிலே
மோசே என்றால்
தண்ணீரிலிருந்து
எடுக்கப்பட்டவன்
என்றிருக்கலாம்.



16

ஆகையால் மோசே திரும்பவும்
தன்னுடைய பெற்றோரிடமும், வீட்டிற்கும்
வந்துவிட்டான்.  தேவனையும், எபிரேய
ஜனங்களையும் நேசிக்க அவனுக்கு
கற்றுக்கொடுத்தார்கள்.
இன்னும் கொஞ்ச
காலத்தில் அவன்
அரண்மனையில்
பார்வோனின்
மகளுடன் வாழப்
போய் விடுவான்.





17

குழந்தை மோசேயை தேவன்
காப்பாற்றி, அவனுக்கு ஒரு
பெரிய எதிர்கால திட்டத்தை
வைத்திருந்தார்.





18

நதியிலிருந்து வந்த இளவரசன்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

யாத்திராகமம்  2

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது."  சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும்.
அதை அவர் பாவம் என்று அழைக்கிறார்.  பாவத்திற்கு தண்டனை
மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த
குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய
தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில்
மரணமடையச் செய்தார்.  இயேசு உயிரோடு வந்து, திரும்பவும்
பரலோகத்திற்கு சென்றார்.  இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை
மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த
வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே
இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை
மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு
எப்போதும் இருக்க உதவி செய்யும்.  நான் உம்முடைய பிள்ளையாக வாழ
உதவி செய்யும்.  ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.